


**26.11. 2024**

தலைப்புச் செய்திகள்

1. அரசியலமைப்பு சாசன கொள்கைகளை பின்பற்றி வளர்ந்த இந்தியா இலக்கை எட்ட நாட்டுமக்கள் முனைப்புடன் செயலாற்றுமாறு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அறிவுறுத்தியுள்ளார்.

2. தேசத்திற்கு வழிகாட்டும் ஒளி விளக்காக இந்திய அரசியலமைப்பு சாசனம் திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

3. சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தலைமையில் அரசியலமைப்பு சாசன உறுதிமொழி ஏற்கப்பட்டது.

4. தென்மேற்கு வங்ககடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுவடைந்துள்ளது.

5. தமிழ்நாட்டில் கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

இந்திய அரசியலமைப்பு

சமூக நீதி மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான இலக்குகளை எட்ட வகை செய்யும் எழுச்சியூட்டும் ஆக்கப்பூர்வமான ஆவணமாக இந்திய அரசியலமைப்பு சாசனம் திகழ்கிறது என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசியலமைப்பு சாசன தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி நாடாளுமன்ற மையமண்டபத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், சமூகத்தின் அனைத்து பிரிவினர், குறிப்பாக ஏழைஎளிய மக்களின் நலத்திற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

ஏழை எளிய மக்களுக்கு சொந்த வீடுகள் கிட்டுவதாகவும், உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு நாட்டில் உருவாக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு சாசன கொள்கைகளை பின்பற்றி வளர்ந்த இந்தியா இலக்கை எட்ட நாட்டுமக்கள் முனைப்புடன் செயலாற்றுமாறு குடியரசு தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

மக்களவையிலும், சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கான இடஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டு மகளிர் ஆளுமைக்கான புதிய சகாப்தம் உருவாக்கப் பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் 75-வது ஆண்டு கொண்டாடப்படும் இத்தருணத்தில், பொருளாதார வளர்ச்சி, வலுவான கட்டமைப்பு, மின்னணு பரவல்மயம் போன்றவற்றால் நம்நாடு சர்வதேச அங்கீகாரம் பெற்றிருப்பதாக எடுத்துரைத்தார்.

ஜனநாயகத்தை அடித்தளமாக கொண்டு அரசியலமைப்பு முன்னெடுத்துச் செல்லப்படுவதே இந்த சாதனைகளுக்கான சான்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

இத்தருணத்தில் அரசியலமைப்பு சாசனத்தின் மதிப்பீடுகளை பேணும் வகையில் நாம் நம் கொள்கைகளிலும், செயல்பாட்டிலும் அர்பணிப்புடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

75-வது ஆண்டு அரசியலமைப்பு தினத்தை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தத்தம் பகுதிகளில் மக்களிடையே கொண்டுசெல்ல வேண்டுமென்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் அரசியலமைப்பின் 75-வது ஆண்டு நினைவு நாணயம் மற்றும் அஞ்சல் தலையை குடியரசு தலைவர் வெளியிட்டார்.

அரசியல் சாசனத்தின் சிறப்பை எடுத்துரைக்கும் புத்தகங்களும் வெளியிடப்பட்டன.

இந்திய அரசியலமைப்பு சாசன வடிவமைப்பை சித்தரிக்கும் கையேடும் வெளியிடப்பட்டது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்நாளையொட்டி உச்சநீதிமன்றத்தில் இன்றுமாலை நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு.நரேந்திரமோடி சிறப்புரையாற்றுகிறார்.

இன்று தொடங்கி அடுத்த ஆண்டு நவம்பர் 26-ம் தேதிவரை ஓராண்டுகாலம் அரசியலமைப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖

பிரதமர் - அரசியலமைப்பு

இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் 75-வது ஆண்டு தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி நாட்டுமக்கள் அனைவருக்கும் தமது வாழ்த்துக்களை உரித்தாக்கியுள்ளார்.

தேசத்தை வழிநடத்தும் ஒளிவிளக்காக அரசியல் சாசனம் திகழ்கிறது என்று பெருமிதம் தெரிவித்துள்ள பிரதமர், நம்நாட்டில் தொன்றுதொட்ட பழமையான கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் நவீன தளம் நமது அரசியல் சாசனம் என்று அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

இத்தருணத்தில் நம்நாடு முழுமையான வலுவுடனும், திறனுடனும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற பெருமையுடன் முன்னேறி செல்வதாக பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖

அரசியலமைப்பு முதலமைச்சர்

சென்னை தலைமை செயலகத்தில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரையை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வாசிக்க அமைச்சர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித்தலைவர் தலைமையில் அரசியலமைப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

மத்திய மாநில அரசு அலுவலகங்களிலும் பள்ளி கல்லூரிகள் உள்ளிட்ட முக்கிய தளங்களிலும் அரசியல் சாசன முகப்புரை இன்று வாசிக்கப்பட்டு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் சுற்றுலா மற்றும் வணிகவரி பதிவுத்துறைகளின் சார்பில் 57 கோடியே 62 அரை லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடங்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் முதலமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

சுற்றுலாத்துறை சார்பில் ஒகேனக்கல் அருவி பகுதிகள், கொல்லிமலை, ஆன்டிபாளையம் ஏரி, வத்தல்மலை, முட்டம் கடற்கரை, அந்தியூர் ஏரி, மன்னார்குடி ஹரித்ராநதி கோவில்குள மேம்பாட்டு பணிகளும் இதில் அடங்கும்.

பதிவுத்துறையின் சார்பில் திருச்சி, அரியலூர், திருவாரூர், நாகை, கடலூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களின் 17 சார்பதிவாளர் அலுவலக கட்டடங்களும் இன்று திறந்துவைக்கப்பட்டன.

❖❖❖❖❖❖

குடியரசு தலைவர் பயணம்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு 4 நாள் பயணமாக நாளை தமிழகம் வருகிறார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரியில் நாளைமறுநாள் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசு தலைவர் பங்கேற்கிறார்.

நீலகிரி மாவட்ட பழங்குடியின மக்களிடையே அவர் வரும் வெள்ளிக்கிழமை கலந்துரையாடுகிறார்.

வரும் சனிக்கிழமை திருவாரூர் மத்திய பல்கலைக்கழத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் குடியரசு தலைவர் பங்கேற்கிறார்.

நீலகிரி மாவட்டத்தில் இன்றுமுதல் ட்ரோன்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

மும்பை தாக்குதல்

மும்பை தீவிரவாத தாக்குதல் தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது.

இத்தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்புபடை வீரர்களுக்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

தீவிரவாதத்தை வேரோடு களைய இந்திய உறுதியுடன் செயல்பட்டு வருவதாக குடியரசு தலைவர் எடுத்துரைத்தார்

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் மும்பை தீவிரவாத தாக்குதலில் துணிச்சலுடன் போராடிய பாதுகாப்பு படையின் வீரத்தை நாடு என்றென்றும் தலைவணங்குவதாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

பேரிடர் நிதி

நாட்டில் 15 மாநிலங்களின் பேரிடர் மேலாண்மை மற்றும் திறன்மேம்பாட்டு கட்டமைப்பிற்காக ஆயிரத்து 115 கோடி ரூபாய் நிதி அனுமதித்து மத்திய அரசு இன்று அனுமதி வழங்கியுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களுக்கு 378 கோடி ரூபாயும்,

உத்தரகாண்ட் ஹிமாச்சல பிரதேசத்திற்கு தலா 139 கோடி ரூபாயும்,

மஹாராஷ்டிர மாநிலத்திற்கு 100 கோடி ரூபாயும்,

கர்நாடகத்திற்கு 72 கோடி ரூபாயும்,

தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்திற்கு தலா 50 கோடி ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் திறன் மேம்பாடு பயிற்சி கட்டமைப்பிற்காக அனைத்து மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களுக்கு 115 கோடி ரூபாய் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

வானிலை

தென்மேற்கு வங்ககடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து உள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையத்தின் தென்மண்டல தலைவர் திரு. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்

.. வாய்ஸ் ..

இதனிடையே சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு உட்பட வட தமிழகம், டெல்டா மாவட்டங்கள், கடலோர மாவட்டங்களில் அடுத்த சிலமணி நேரத்தில் மிதமான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

மழை

இந்நிலையில் நாகை மாவட்டத்தில் கடல் சீற்றமாக காணப்படுவதாலும் அலைகள் பலஅடி உயரமாக எழும்புவதாலும் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்க செல்லவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

திருவாரூர் மாவட்டம் மாவூர், மாங்குடி, நன்னிலம், குடவாசல், மன்னார்குடி, திருத்துறைபூண்டி, நீடாமங்கலம், வலங்கைமான் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்துவருகிறது.

மயிலாடுதுறை மழை நிலவரம் குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

மழை மாவட்டங்கள்

செங்கல்பட்டு சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர் கனமழை பெய்துவருகிறது.

பரனூர், சிங்கபெருமாள் கோவில், மறைமலை நகர், பொத்தேரி, காட்டாங்குளத்தூர், ஊரப்பாக்கம், கூடுவாஞ்சேரி பகுதிகளிலும்,

தாம்பரம், குரோம்பேட்டை, மீனம்பாக்கம், நங்கநல்லூர் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்துவருகிறது.

இதன்காரணமாக தேசிய நெடுஞ்சாலையில் வாகனஓட்டிகள் சிரமத்திற்குள்ளாயினர்.

காஞ்சிபுரம் வாலாஜாபாத், உத்திரமேரூர் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழைபெய்து வருகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே கீழ்குப்பம், செம்பாகுறிச்சி, அனுமநந்தல், நைனார்பாளையம், வி.மாமந்தூர், கருந்தலாகுறிச்சி கிராமங்களில் பரவலாக சாரல்மழை பெய்துவருகிறது.

❖❖❖❖❖❖

முதலமைச்சர் - மழை மீட்பு குழு

தமிழ்நாட்டில் பரவலாக கனமழை பெய்துவருவதால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மாவட்ட நிர்வாக அறிவுரையின் பேரில் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க செல்வதை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விவசாய பெருமக்கள், பயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருப்போர் மழைக்கு ஏற்றவாறு தங்கள் திட்டங்களை வகுத்துக்கொள்ளவும் அறிவுறத்தப்பட்டுள்ளனர்

கர்பிணி பெண்கள், முதியோர், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகளுக்கு தனி கவனம் செலுத்துமாறும், கால்நடைகளை பாதுகாத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாநில மற்றும் மாவட்ட அவசர கால செயல்பாட்டு மையங்கள் மூலம் மழை நிலைமை மாநிலத்தில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாக அரசு தெரிவித்துள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றுள்ள படகுகள் அருகிலுள்ள துறைமுகங்களுக்கு செல்ல நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் தகவல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அரசு கூறியுள்ளது.

மீட்பு நிவாரண பணிகளை மேற்கொள்ளும் வகையில் தமிழ்நாடு பேரிடர் மீட்புப்படையின் 6 குழுக்கள் திருச்சி, திண்டுக்கல் மாவட்டங்களிலும், தேசிய பேரிடர் மீட்பு படையின் இருகுழுக்கள் சென்னை, திருநெல்வேலி மாவட்டத்திலும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

தேவைக்கேற்ப பேரிடர் குழுக்களை சம்மந்தப்பட்ட மாவட்டங்களுக்கு உடனடியாக அனுப்ப அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சென்னையில் அம்பத்தூர், மாதவரம், விருகம்பாக்கம் உள்ளிட்ட 7 இடங்களில் உள்ள ஆவின் நவீன பாலகங்கள் 24 மணி நேரமும் இயங்கும் என, ஆவின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

கோவி.செழியன்

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர்.கோவி.செழியன் தெரிவித்துள்ளார்

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், கல்வியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி ஆசிரியர் பணியிடங்களுக்கான பொது கலந்தாய்வில் 291 பேருக்கு பணி மாறுதல் ஆணைகள் இன்று வழங்கப்பட்டதாக கூறினார்.

முன்னதாக போதைபொருட்கள் இல்லா தமிழ்நாடு விழிப்புணர்வு பேரணியை மீனாட்சி அரசினர் கல்லூரியில் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖

தாமோ அன்பரசன்

தமிழ்நாட்டில் கைவினை கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், எண்ணற்ற நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக, மாநில குறுசிறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

சென்னை மாமல்லபுரத்தில், பூம்புகார் கைவினை கலைஞர்கள் விருது வழங்கும் விழாவில் இன்று 227 பேருக்கு 24 அரை லட்சம் மதிப்பிலான ரொக்கப்பரிசு, தங்கப்பதக்கங்களை அமைச்சர் வழங்கி கௌரவித்தார்.

❖❖❖❖❖❖

ஹாக்கி

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டிகள் மஸ்கட்டில் இன்று தொடங்குகின்றன.

இந்தியா, ஜப்பான், பங்களாதேஷ், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.